செ.வெ.எண்: 56 / மே /2020 நாள்: 20.05.2020

**திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்:**

----------------

இன்று (20.05.2020) பெரம்பலூர் மாவட்டத்தைச் சார்ந்த 7 நபர்களும், அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த 2 நபர்களும் என மொத்தம் 9 நபர்கள் கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தினைச் சார்ந்த 2 நபர்களும், பெரம்பலூர் மாவட்டத்தைச் சார்ந்த 7 நபர்கள் ஆக கூடுதல் 9 நபர்கள் சிகிச்சைப்பெற்று வருகின்றனர். அனைத்து நபர்களும் நலமுடன் உள்ளனர்.

கடந்த 18.05.2020 அன்று புதுடில்லியிலிருந்து இரயில் மூலம் தப்லிக் மாநாட்டிற்கு சென்று திருச்சிராப்பள்ளிக்கு திரும்பிய 328 நபர்களை திருச்சிராப்பள்ளி அரபிக்கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்ட முகாமில் தங்க வைக்கப்பட்டு கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக பரிசோதனை செய்யப்பட்டது. இதில் எவருக்கும் கொரோனா வைரஸ் நோய் தொற்று இல்லை என்பதால் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த 16 நபர்களும், தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 1 நபரும், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 54 நபர்களும், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த 16 நபர்களும், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 1 நபரும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 27 நபர்களும், நாகப்பட்டிணம் மாவட்டத்தைச் சேர்ந்த 7 நபர்களும், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 21 நபர்களும், நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 2 நபர்களும், பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 1 நபரும், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 11 நபர்களும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 15 நபர்களும், சேலம் மாவட்டத்தைச் சோந்த 44 நபர்களும், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த 5 நபர்களும், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சோந்த 15 நபர்களும், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த 12 நபர்களும், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த 22 நபர்களும், திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 15 நபர்களும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த 43 நபர்களும் ஆகிய 19 மாவட்டங்களைச் சேர்ந்த 328 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்ட முகாமில் இருந்து வீட்டிற்கு 07 பேருந்துகள் மூலம் சொந்த மாவட்டத்திற்கு இன்று (20.05.2020) அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் வீட்டில் 14 நாட்கள் தனிமையில் இருக்க வேண்டும் என்று மருத்துவக்குழுவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேவையில்லாமல் வெளியில் நடமாடுவதை பொது மக்கள் தவிர்க்க வேண்டும். **விழித்திரு - விலகி இரு - வீட்டில் இரு** என்பதை கடைபிடிக்க வேண்டும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை கொரோனா வைரஸ் நோய் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**